# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்திய நன்கொடை ஆதரவுடன் நிர்மாணிக்கப்பட்ட சந்திரன் நகர் மாதிரி கிராமம் அங்குரார்ப்பணம்</u>**

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் கௌரவ அநுர கருணாதிலக ஆகியோர் 2025 மே 28ஆம் திகதி அன்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் முல்லைத்தீவில் நிர்மாணிக்கப்பட்ட சந்திரன் நகர் மாதிரி கிராமத்தினை கூட்டாக அங்குரார்ப்பணம் செய்துவைத்து 24 பயனாளி குடும்பங்களிடம் கையளித்தனர். இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநர் கௌரவ நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் செல்லத்தம்பி திலகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

2. இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைவர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள், இலங்கையின் நகர அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், வடமாகாண சபை மற்றும் முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக அலகுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்து கொண்டுசிறப்பித்திருந்தனர்.

3. இங்கு உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள், குறிப்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள சமூகங்களின் அபிவிருத்திக்காக ஆதரவு வழங்குதல் மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல் உட்பட இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியா வழங்கி வரும் நிலையான ஆதரவினை உறுதிப்படுத்தியிருந்தார். இதேவேளை இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் கௌரவ அனுர கருணாதிலக அவர்கள், வீடமைப்புத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மக்களை முன்னிலைப்படுத்தி இந்தியா மேற்கொண்டுவரும் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களுக்காக இலங்கை அரசாங்கத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்திருந்தார்.

4. மாதிரி கிராம வீடமைப்பு திட்டங்களுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையானது 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்திய அரசாங்கம் மற்றும் இலங்கை அரசாங்கம் ஆகியவற்றுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இலங்கை முழுவதிலும் குறைந்த வருமானம் பெறும் 600 குடும்பங்கள் இத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு மாவட்டங்களிலும் தலா 24 வீடுகள் இம்மாதிரிக் கிராம வீடமைப்பு திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்றன. இந்திய அரசாங்கத்தின் நன்கொடை மூலமாக இலங்கை அரசின் நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சு குறித்த மாதிரி கிராம வீடமைப்பு திட்டத்தினை அமுல்படுத்திவருகின்றது.

5. முன்னதாக 2025 மே 26 ஆம் திகதி ஜிம் பிறவுண் நகர் மாதிரி கிராமம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அத்துடன் ஏனைய 13 மாவட்டங்களில் உள்ள மாதிரி கிராமங்களும் முன்னர் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் 97 வீதமானவை நிறைவடைந்திருக்கும் நிலையில் மீதமுள்ள மாதிரி கிராமங்கள் வெகு விரைவில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது

**********

**கொழும்பு**
**2025 மே 29**